இரட்சிப்பு

# நடைமுறை பரிசுத்தமாக்கப்படுதல்

(பரிசுத்தமாக்குதல் – பரிசுத்த ஆவியானவருடைய வேலையாகும்)

கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிவதினாலே கிடைக்கும் அனுபவமே நம்மை பரிசுத்தமுள்ளவர்களாக்குகிறது. அது தான் நடைமுறை பரிசுத்தமாக்கப்படுதல்.

நம்மை பூரணமாக தேவனுக்கென்று ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 6:13, 12:1)

**ஜீவ பலி:**

- ஒவ்வொரு நாளும் பலமுறை நாம் நம்மை கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்க வேண்டும்.
- நாம் ஒவ்வொரு முறை பலிபீடத்திலே நம்மை வைத்தாலும் மறுபடியும் அதை விட்டு தவழ்ந்து எழுந்து வந்து விடுகிறவர்களாய் இருக்கிறோம். எனவே, அடிக்கடி ஒவ்வொரு காரியத்தைக் குறித்து சிந்திக்கும் போதும், செயல்படும் போதும், நம்மை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து அவருக்கு பிரியமாய் வாழ நம்மை அழைத்திருக்கிறார்.

**நமது பிரச்சனை:**

- நமது பழைய சுபாவத்திற்கு நாம் நம்மை ஒப்புக் கொடுத்து விடுகிறோம். இது தவறு.
- நம் வாழ்க்கைப் போராட்டத்திற்கு காரணம் தேவனோடு நாம் நடந்து செல்வதில்லை. ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அத்தியாவசியமான வேத வசனங்களை தொடர்ந்து படிக்கிறதில்லை.
- பாவத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட நாம் பாவத்திற்கு மிக அருகிலே நின்று கொண்டிருக்கிறோம். அதனால் தான் வெகு சீக்கிரமாக அவற்றில் விழுந்து விடுகிறோம்.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- பாவத்தை விட்டுவிட்டு வெகு தூரமாக ஓட வேண்டும். நாம் அமைதலாக இருக்கக் கூடாது. ஆவிக்கேற்ற காரியங்களில் நாம் செயல்பட வேண்டும்.

  (கலாத்தியர் 5:16,17, 1 கொரிந்தியர் 9:24,26)

**1. கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறி செல்ல தடை:–**

1. **<u>பாரமான காரியங்கள்:–</u>** தேவையற்றது. கிறிஸ்தவ ஓட்டத்தை தடை செய்யக் கூடாது. எ.கா. பணத்தை செலவு செய்யும் விதம், நாம் வைத்திருக்கும் தேவையில்லாத உறவு.

- கிறிஸ்தவ வாழ்க்கையிலே தவறு என்று கூறமுடியாத தன்னில்தானே பாவமற்ற பல காரியங்களை சுமந்து திரிகிறோம்.
- உங்கள் விசுவாச வாழ்க்கையில் தடை செய்தது எது ?
- எந்த இடத்திற்கு சென்றதினாலே மறுபடியும் பாவத்தில் விழுந்தீர்கள் ?
- யாரோடு கூட தொடர்பை புதுப்பித்ததினாலே மீண்டும் பாவத்தில் விழுந்தீர்கள் ?
- நண்பர்கள் (நல்ல நண்பர்கள்) தவறான ஆலோசனை கொடுத்ததினால் தவறி போனீர்களா ?

**<u>2. நெருங்கி நிற்கிற பாவம் – அவிசுவாசம்:</u>**

- தேவனுடைய செய்கைகளை குறித்து வாசிக்கும் போது விசுவாசம் வளரும். ஒவ்வொரு நாளும் வேத வசனத்தால் நம்மை சுத்திகரிக்க வேண்டும்.

**<u>3. மாம்சத்திற்குரிய பாவம்:</u>**

- சரீரத்தில் செய்யும் பாவம், பெருந்தீனி, போதை, மாம்ச இச்சை, குடி, பாலுறவை முக்கியப்படுத்தும் புத்தகம், இணையதளம், செல்போன், SMS, .........

இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

## 4. ஆவியினால் உண்டாகும் பாவம்:

- ❖ மற்றவர்களை குறித்து குறைவாக பேசுவது, பெருமை, அவிசுவாசம், பொறாமை, மற்றவர்களை பாதிக்கும் வார்த்தைகள்.

➢ வேத வசனத்தில் வேர் விட்டிருக்கிறாயா ?

➢ ஆவிக்குரிய காரியங்களில் முயற்சி செய்கிறீர்களா ?

சுய பெலத்தினாலே மேற்கொள்ள முடியாத பாவங்களை பரிசுத்த ஆவியானவரே மேற்கொண்டு கிறிஸ்துவைப் போல வாழ உதவி செய்கிறவராயிருக்கிறார். (ரோமர் 8:26) சுய பெலத்தினாலே மேற்கொள்ளக்கூடிய பாவங்கள் நாம் தான் மேற்கொள்ள வேண்டும். (2 கொரிந்தியர் 7:1, 9:27, தீத்து 1:5, 1 தீமோத்தேயு 4:7,8 2 பேதுரு 1:3–10)

➢ பரிசுத்தமாக்குதலில் நம்முடைய பங்கு பாவத்தினைத் தேடி கண்டுபிடித்து தேவனிடம் அறிக்கை செய்து சுத்திகரிக்க வேண்டும். ஜெபத்தில் வல்லமையை நாட வேண்டும். (யாக்கோபு 1:22–25 (கண்ணாடி = தேவனுடைய வார்த்தை).

➢ பரிசுத்த ஆவியானவர் நம்முடைய குறை குற்றங்கள் ஒவ்வொன்றாய் வெளிப்படுத்தப்படும் பொழுது அறிக்கை செய்து விடுதலை பெற வேண்டும். (ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் வெளிப்படுத்தமாட்டார்).

➢ இதுவே நாம் வளர்வதற்கான பரிசுத்த பாதையாகும்.